**தலைப்பு 104 – தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய கொள்கை, பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2020 ஜூன் 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சு தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 ஒக்தோபர் 15 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இவ்வறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆந் திகதிய 271/2019 இலக்கங் கொண்ட பொதுநிதிச் சுற்றிக்கையின் ஏற்பாடுகளின் படி தயாரிக்கப்பட்டு அந் நிதிக் கூற்றுக்களில் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய முறையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக வெற்றிகரமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு அன்றி சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெரிந்து கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மை கணக்கீடு மதிப்பீடுகளின் நியாயத் தன்மை முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களை மதிப்பீடு செய்தப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டின் தலைப்பு – 104 ,தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் விடயங்களின் ஏற்பட்டிருந்த மாற்றங்களின் காரணமாக மீளாய்வாண்டின் போது தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வளிப்பு, வடக்கு அபிவிருத்தி, தொழிற்பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு என நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. எனினும் நிதிக்கூற்றுக்களில் முன்னைய ஆண்டிற்கான எண்ணிக்கைகள் என சமர்ப்பித்திருந்தது தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரிவிற்கான எண்ணிக்கைகள் மாத்திரம் என்பதால் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக காணப்பட்டது என குறிப்பிட முடியாது.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பின்வரும் பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| 2018 ஆண்டிற் கான பந்தியுடன் தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை |
|---|---|---|
| 1.6.4(இ) | ஊழியர் சேமலாப நிதியத்திற்கு கணினிகள் பெற்றுக்கொள்வதற்காக 2016 ஆம் ஆண்டின் போது வழங்கியிருந்த ரூபா 10 மில்லியனிற்கான அலுவலக உபகரணங்கள் அமைச்சின் ஆரம்ப மீதியில் உள்ளடங்கியிருந்தது. | அமைச்சின் அல்லாத சொத்துக்களை சரியாக இனங்கண்டு அதன் படி சொத்துக்கள் கணக்குகள் சரிசெய்யப்பட வேண்டும். |

### 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.6.1 நிதி செயலாற்றல் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| தொழிற்பயிற்சி மற்றும் திறன் அபிவிருத்தி பிரிவிற்கு உபகரணங்கள் வழங்குதல், 2019 ஆண்டின் போது கொழும்பு தொழிற்பயிற்சி நிலையம் நிர்மாணித்தல் மற்றும் கம்பஹா தொழிநுட்ப கல்லூரியை அபிவிருத்தி செய்தல் ஆகிய செயற்திட்டங்கள் தொடர்பாக செலுத்தப்பட்டிருந்த நேர் வெளிநாட்டுக் கொடுப்பனவு என ரூபா 205,670,588 தொகை மத்திய வங்கி அறிக்கையில் 2019 திசெம்பர் மாதத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தது. எனினும் தேசிய கடன் எல்லையை விஞ்சாதிருக்க வேண்டும் என்பதற்காக 2019 ஆம் ஆண்டின் கீழ் அதனை கணக்கீடு செய்யாமல் இருப்பதற்கு திறைசேரி தீர்மானம் எடுத்திருந்த காரணத்தினால் நிதிக்கூற்றுக்களில் 03 செலவு விடயங்களின் கூட்டுத்தொகை ரூபா 205,670,588 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | காலப் பகுதிக்கான செலவுகளை கணக்கீடு செய்வற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | இணங்குகின்றேன். 2019 ஆண்டிற்காக போதியளவு ஏற்பாடுகள் பெற்றுக்கொண்டிருந்த போதிலும் தேசிய கடன் எல்லையை மிகைக்க முடியாத காரணத்தினால் 2019 ஆண்டின் கீழ் அதனை கணக்கீடு செய்யாமல் இருப்பதற்கு திறைசேரியினால் தீர்மானிக்கப்பட்டிருந்தது என. |

#### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தலைமைத்துவப் பயிற்சி தேசிய நிலையத்தின் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி அல்லாத சொத்துக்களின் மீதி ரூபா 15,771,902 தொகை எனினும் அது 2019 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ரூபா 879,900 தொகை என காட்டப்பட்டிருந்தமையால் நிதி அல்லாத சொத்துக்கள் ரூபா 14,892,002 தொகை குறைவாகக் காட்டப்பட்டிருந்தது. அதற்கான காரணத்தை நிதிக் கூற்றுக்களில் குறிப்பு ஒன்றின் மூலம் சமர்ப்பித்திருக்கவில்லை. | முன்னைய ஆண்டின் வருட இறுதி மீதி மீளாய்வாண்டின் ஆரம்ப மீதியுடன் சமமாக இருக்க வேண்டியதால் அம் மீதிகளில் இணக்கமின்மை ஒன்று காணப்படின் அதற்காக இணக்கக் கூற்றொன்று தயாரிக்கப்பட்டு வெளிப்படுத்தல் | 2019 ஆம் ஆண்டின் போது பெறுமதி மதிப்பீட்டு அலுவல்கள் பூர்த்தி செய்வதற்கு முடியாது இருந்த நிதி அல்லாத சொத்து அலகு ஒன்றிற்காக ரூபா 100 இற்கான பெயரளவில் பெறுமதி என கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் நிதியல்லாத சொத்துக் களின் ஆரம்ப மீதி |

| | | | |
|---|---|---|---|
| | | வேண்டும். | குறைந்திருந்தது. 2020 ஆண்டின் போது சொத்துக்களை பெறுமதி மதிப்பீடு செய்யும் அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டு நிதிக் கூற்றுக்களில் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்ட சரியான பெறுமதி காட்டப்படும் எனவும் சிகாஸ் நிகழ்ச்சித் திட்டத்திற்கு உட்படுத்தப் பட்டிருந்த சொத்துக்களின் பெறுமதி நிதிக்கூற்றில் காட்டப்பட வேண்டியிருந்த மையால் அப்பெறுமதி காட்டப்பட்டதென அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | இளைஞர் விவகாரப் பிரிவில் 2018 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதியல்லாத சொத்துக்களின் மீதி ரூபா 21,478,925 தொகை எனினும் அதனை 2019 ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு ரூபா 31,574,380 தொகை எனக் காட்டப்பட்டிருந்தமையால், நிதி அல்லாத சொத்துக்களில் ஆரம்ப மீதியில் ரூபா 10,095,455 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது எதிர்பாரா செலவு நிதியத்தில் இருந்து கொள்வனவு ரூபா 5,906,000 தொகை ஆரம்ப மீதிக்கு சீராக்கல் செய்த பின்னர் தொடர்ந்தும் ரூபா 4,189,455 இற்கான வித்தியாசம் ஒன்று அவதானிக்கப்பட்ட போதிலும், அதற்கான காரணத்தை நிதிக்கூற்றுக்களில் குறிப்பொன்றின் மூலம் சமர்ப்பித்திருக்கவில்லை. | முன்னைய ஆண்டின் இறுதி மீதி மீளாய்வாண்டில் ஆரம்ப மீதியாக இருக்க வேண்டியமையால் அம் மீதிகளில் இணக்கமின்மை ஒன்று காணப்படின் அதனை இணக்கக் கூற்றொன்றின் மூலம் வெளிப்படுத்த வேண்டும். | 2018 இல் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதி என உட்படுத்தி இருந்தவை அவ்வாண்டின் போது கொள்வனவு செய்திருந்த சொத்துக் களின் பெறுமதி மாத்திரம் எனவும் 2019 ஆரம்ப மீதியில் முன்னைய ஆண்டில் உட்படுத்தப் பட்டிருக்காத சொத்துக்கள் போலவே அவ்வாண்டிற் கான கொள்வனவுகளும் அடங்கியிருந்தன என. |
| (இ) | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரிவு தொடர்பாக மீளாய்வாண்டின் போது பயணிகள் வாகனங்கள் தவிர ஏனைய நிதியல்லாத சொத்துக்கள் கொள்வனவு செய்தல் பெறுமதி ரூபா 3,108,035 தொகை எனினும் அதனை ரூபா 2,140,765 தொகை என காட்டப்பட்டிருந்த மையால் சொத்துக்கள் கொள்வனவு செய்தல் ரூபா 967,270 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | ஆண்டின் போது தனதாக்கப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரிவில் 2019 ஆண்டின் போது 104-1-2-0-2103 கீழ் செலவுகள் ரூபா 528,850 தொகையாக காணப்பட்டதுடன் அவை திறைசேரி அச்சுப் பதிவுகளின் படியும் இணங்குகின்றன என |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி பிரிவினால் 2019 ஆண்டின் போது அப்புறப்படுத்தப் பட்டிருந்த ரூபா 2,856,029 இற்கான சொத்துக்கள் நிதியல்லாத சொத்துக்கள், கணக்குகளின் பெறுமதியில் இருந்து அகற்றப்பட்டிருக்காத போதிலும், அதற்கான காரணத்தை குறிப்பொன்றின் மூலம் சமர்ப்பித்திருக்கவில்லை. | அப்புறப்படுத்தப்பட்ட சொத்துக்கள் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதியில் இருந்து அகற்றப்பட வேண்டும். | ஒரு தலைப்பின் செலவு விடயங்கள் வேறொரு தலைப்பின் உப அலுவலகத்தில் இருந்து கணக்கீடு செய்யும் போது நிதியல்லாத சொத்துக்களை கணக்கீடு செய்வதற்காக முறையான நடைமுறை ஒன்று சிகாஸ் முறைமையின் கீழ் காணப்படாமையால் அப்புறப்படுத்தல் பெறுமதி யை அகற்றுவதற்கு முடியாமல் போனதெனவும் அதனை 2020 ஆண்டின் போது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என |

### 1.6.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார பிரிவு தொடர்பான ரூபா 832,431,983 தொகைக்கான பயணிகள் வாகனம் மற்றும் பிரதேச அபிவிருத்தி பிரிவு தொடர்பான ரூபா 41,893,773 இற்கான நிதியல்லாத சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப் பட்டிருந்த போதிலும், அச் சொத்துக்களில் பௌதீக உளமையை உறுதிப்படுத்தக் கூடிய விதமாக 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பண்டக் கணிப்பீடொன்று மேற்கொள் ளப்பட்டு அக் கணிப்பீட்டின் அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | வருடாந்த பண்டக் கணிப்பீடு மேற்கொள்ளப் பட வேண்டும். | பதில் அளிக்கப்பட வில்லை. |
| (ஆ) | பிரதேச அபிவிருத்தி பிரிவின் நிதியல்லாத சொத்துக்களின் பௌதீக மாற்றங்கள் என ரூபா 50,399,525 தொகை மீளாய்வாண்டிற்கான சொத்துக்களில் இருந்து அகற்றுதல் தொடர்பாக அட்டவணை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதற்கான அங்கீகாரம், அச் சொத்துக் களை சாட்டுதல் மற்றும் பெற்றுக்கொள்ளல் ஆகியவற்றிற்கான பதிவேடுகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | சொத்துக்களை அகற்றுதல் முறைப்படி மேற்கொள்ளப்பட வேண்டியிருந்ததுடன் அது தொடர்பாக எழுத்துமூல தகவல்கள் பேணப்பட வேண்டியிருந்தது. | பதில் அளிக்கப்படவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவுகள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான தேறிய ஏற்பாடுகள் ரூபா 102,477 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன் அவற்றில் ரூபா 67,953 மில்லியன் தொகை ஆண்டின் போது செலவிடப் பட்டிருந்தது. அதன்படி தேறிய ஏற்பாடுகளில் சேமிப்பு நூற்றிற்கு 33.69 சதவீத தொகையாக காணப்பட்டதுடன் அதற்காக 36 சதவீதம் ஆகிய மூலதன ஏற்பாடுகளின் சேமிப்பு முக்கியமான காரணமாக இருந்தது. | சரியான செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியதுடன் ஏற்பாடுகளை பயன்படுத்துதல் செயற்திறனுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். | திறைசேரியின் பாதீட்டு சுற்றறிக்கையின் படி செலவுகளை வரையறுத்தல், ஆண்டின் போது அமைச்சுக்கள் மீளமைக்கப்படல் ஆகிய காரணங்களினால் இந்த நிலைமைக்கு பாவித்திருந்த தென. |
| (ஆ) | பாதீட்டு மதிப்பீடுகளின் மூலம் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு இருந்த கூட்டுத்தொகை ரூபா 576 மில்லியனிற்கான 20 மூலதன செலவு விடயங்களுக்காக ஏற்பாடுகள் மற்றும் கூட்டுத் தொகை ரூபா 11.8 மில்லியனிற்கான மீண்டுவரும் 5 செலவு விடயங்களிற்கான ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமல் முற்றாக சேமிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | இணங்குகின்றேன். |
| (இ) | குறிப்பிட்ட இரண்டு கருமங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஆண்டின் போது இரண்டு சந்தர்ப்பங்களில் பெற்றிருந்த குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கம் ரூபா 310 மில்லியன் தொகை குறிப்பிட்ட கருமங்களுக்காக பயன்படுத்தப் பட்டிருக்கவில்லை. | ஏற்பாடுகளை வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கு கூடிய கவனம் செலுத்தப்பட வேண்டும். | வருட இறுதியளவிலும் கட்டுநிதிகள் பெறப்படாமை மற்றும் குறிப்பிட்ட நிதி உடன்படிக்கைகள் மற்றும் வாணிப உடன்படிக்கைகள் கையொப்பமிடுவதற்குரிய ஆரம்ப வேலை மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருப்பதன் காரணமாக அவ் ஆண்டின் போது நிர்மாண வேலை அலுவல்கள் ஆரம்பிப்பதற்கு முடியாமல் போனது என |
| (ஈ) | 84 மூலதன செலவு விடயங்கள் தொடர்பாக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகளில் 21 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் கூட்டுத்தொகை ரூபா 28,905 மில்லியன் தொகையும், 71 | சரியாக செலவு மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டி இருந்ததுடன் ஏற்பாடுகளை பயன்படுத்துதல் | அமைச்சு மாற்றங்கள், உத்தியோகத்தர் வெற்றிடங்கள், பயிலுனர் சேர்ப்பதில் தாமதம், செலவுகளை வரையறுத்தல், செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படாமை, பயிற்சி |

| | | | |
|---|---|---|---|
| | மீண்டுவரும் செலவு விடயங்களில் 21 சதவீதம் முதல் 100 சதவீதம் வரை வீச்சில் ரூபா 2,263 மில்லியன் தொகையுமாக மொத்த கூட்டுத் தொகை ரூபா 31,168 மில்லியன் தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அந்த சேமிப்பு மொத்த ஏற்பாடுகளில் 39 சதவீதமாக காணப்பட்டது. | வினைத்திறனுடன் மேற்கொள்ளப்பட வேண்டும். | நிகழ்ச்சித் திட்டங்களுக்காக விண்ணப்பிக்காமை போன்ற காரணங்களினால் இந்த சேமிப்புக்கள் ஏற்பட்டிருந்தன என |
| (உ) | 35 செலவு விடயங்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 589,275,000 தொகைக்கான மதிப்பீட்டு ஏற்பாடுகளில் நி.பி.66 மூலம் ஆண்டின் போது ரூபா 309,163,605 இற்கான ஏற்பாடுகள் வேறு செலவு விடயங்களுக்கு மாற்றப்பட்டிருந்தது. அவை மதிப்பீட்டு ஏற்பாடுகளில் 17 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | ஏற்பாடுகள் முறையான திட்ட மொன்றுடன் மற்றும் வினைத்திறனுடன் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெளிநாட்டுப் பிரயாணங்கள் வரையறுக்கப்படல், எதிர்பார்த்த திருத்த வேலைகள் நடைபெறாமை, எதிர்பார்த்த செலவுகள் மேற்கொள்ளப்படாமை போன்ற காரணங்களினால் இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டன என |
| (ஊ) | கூட்டுத்தொகை ரூபா 6,633,050,000 தொகைக்கான 09 செலவு விடயங்களில் ஆரம்ப செலவு மதிப்பீடு மீளாய்வாண்டின் போது திருத்தத்திற்கு இலக்காகி இருந்ததுடன், அது ஆரம்ப மதிப்பீட்டின் 53 சதவீதம் மூலம் 271 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | நடைமுறை சாத்தியமான அடிப்படையில் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்பாடுகள் போதியளவு காணப்படாமையால் மதிப்பீடுகள் திருத்தப்பட்டன. |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் ஈடுபாட்டுப் பொறுப்புக்களுக்கு அணுகுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப் பிரமாணங்கள் 94(1) ஈடுபாட்டுப் பொறுப்புக்கள் ஏற்படுத்துவதற்கு முன்னர் குறிப்பிட்ட செலவு விடயத்தில் போதியளவு ஏற்பாடுகள் காணப்படு கின்றனவா என உறுதிப்படுத்திக் கொள்ளாமல் 06 செலவு விடயங்களில் சேமிப்புக்களை மிகைத்து கூட்டுத் தொகை ரூபா 9,137,953 இற்கான பொறுப்புக்களுக்கு அணுகியிருந்தது. | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் செயற்பட வேண்டும். | வருட இறுதியில் தீர்த்தப்பதற்கு உரிய சிட்டைகளுக்காக இவ்வாறு பொறுப்புக்களுக்கு அணுகி இருந்த போதிலும் கட்டுநிதிகள் கிடைக்கப் பெறாமையால் கொடுப்பனவு மேற்கொள்ளப்படாமையால் ஏற்பாடுகளை மிகைத்து கொடுப்பனவுகள் மேற்கொள் ளப்படவில்லை என |

**2.3 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணங்கள் பீ கணக்கு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத் தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின் சேவையை விட்டுச் சென்றுள்ள 14 உத்தியோகத்தர்கள் தொடர்பான ரூபா 1,664,538 தொகையும், வேலை இடைநிறுத்தப் பட்டுள்ள 07 உத்தியோகத்தர்கள் தொடர்பான ரூபா 455,017 தொகையும், ஓய்வு பெற்றுள்ள 08 உத்தியோகத்தர்கள் தொடர்பான ரூபா 473,605 தொகையும், ஏனைய அமைச்சுக்கள்/ திணைக்களங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள 30 உத்தியோகத்தர் தொடர்பான ரூபா 906,391 தொகையும் சம்பளமற்ற விடுமுறை பெற்றுள்ள 02 உத்தியோத்தர்கள் தொடர்பான ரூபா 1,076,581 தொகையும், இறந்த உத்தியோகத்தர் ஒருவர் தொடர்பான ரூபா 11,810 தொகையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டிருந்த 02 உத்தியோகத்தர்கள் தொடர்பான ரூபா 81,674 தொகையும் ஆக கடன் மீதிகள் காணப்பட்டதுடன், அந்த கடன் மீதிகளில் 05 வருடங்களை விட மிகையான காலம் அறவிட முடியாமல் காணப்பட்ட 55 உத்தியோகத்தர்கள் தொடர்பான ரூபா 3,840,144 தொகை கடன்மீதிகள் காணப்பட்டன. | பொருத்தமான நடவடிக்கைகள் எடுத்து இந்த நிலைமையை தீர்க்க வேண்டும். | உத்தியோகத்தர்களின் கடன் கோப்புக்கள் இன்மை, கடன் தகவல்கள் காணப்படாமை மற்றும் சில கடன்கள் அறவீடு செய்வதற்காக சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது என |
| (ஆ) | கடன் பதிவேட்டின் படி இரண்டு உத்தியோகத்தர்கள் தொடர்பான ரூபா 55,445 தொடர்பான 02 கடன் மீதிகள் அரசாங்க உத்தியோகத்தர் களுக்கான முற்பணக் கணக்கில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. மேலும் அமைச்சின் இரண்டு பிரிவுகள் இடையே இடமாற்றம் பெற்றுள்ள இரண்டு உத்தியோகத்தர் தொடர்பான கடன் மீதிகள் அந்த இரண்டு பிரிவுகளின் கடன்மீதியின் கீழ் காட்டப்பட்டிருந்த போதிலும் அரசாங்க உத்தியோகத்தருக்கான முற்பணக் கணக்கில் கடன்மீதிகள் ரூபா 229,633 இனால் மிகையாக காட்டப்பட்டிருந்தது. | அனைத்து கடன் மீதிகளையும் கணக்குகளில் உட்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | தவறின் காரணமாக ஏற்பட்ட தெனவும் எதிர்காலத்தில் சரிசெய்யப்படும் என. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சாட்டுதல்கள் நிறைவேற்றப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) உயர் கல்விக்கான சிறந்த நிலையம் ஒன்றினை நிறுவுவதற்காக அரச மற்றும் தனியார் பங்களிப்புடன் வ/ப உயர் தொழிநுட்பவியல் நிறுவனம் 2017 ஆகஸ்ட் 01 திகதி நிறுவப்பட்டிருந்தது. தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள், உயர் கல்வி மற்றும் பெருந்தெருக்கள் மற்றும் விஞ்ஞானம், தொழிநுட்ப ஆய்வுகள் அமைச்சர்களினால் ‘‘வரையறுக்கப்பட்ட உயர் தொழி நுட்பவியல் நிறுவனத்துக்காக 1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஏற்பாடுகள் வழங்குதல்’’ என்ற தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒன்றிணைந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2017 திசெம்பர் 05 ஆந் திகதி அமைச்சரவை யினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. வெளிநாட்டு நிறுவனம் ஒன்றினால் நிறைவேற்றப் பட வேண்டிய சேவைக்காக 1 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தொகையொன்று ஏற்பாடுகள் வழங்குவதற்கு அங்கீகாரம் கிடைத்திருந்தது. அதன்படி அந் நிறுவனத்துடன் 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி உடன்படிக்கை ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேற் கூறிய அமைச்சரவை தீர்மானம் மற்றும் உடன்படிக்கையின் படி புதிய வணிக பாடசாலையின் முகாமைத்துவத்துக்காக முறையான நிர்வாக சபையொன்று நிறுவுவதற்கு தேவையான நிரந்தர திட்டம் ஒன்று தயாரிப்பதற்காக அந்த வெளிநாட்டு நிறுவனத்தில் இருந்து தேயைான சேவையினை பெற்றுக்கொள்வதற் காக ரூபா 113.75 மில்லியன் தொகையொன்று 2018 ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்தது. மேலும், அதற்காக 2019 ஆண்டின் போது ரூபா 40 மில்லின் ஏற்பாடுகளை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த | அரசாங்கப் பணம் சிக்கனத்துடன் மற்றும் வினைத்திறனுடன் பயன்படுத்தப்பட வேண்டும். | இந்த செயற்திட்டத்துக்காக 2019 ஆண்டிற்கான மொத்த ஏற்பாடுகள் ஆகிய ரூபா 40 மில்லியன் தேசிய பாதீட்டு திணைக்களத்தினால் முடக்கி வைக்கப்பட்டி ருந்தது. அமைச்சரவை தீர்மானத்தின் படி அமைச்சுச் செயலாளரினால் விரிவான செயற்திட்ட அறிக்கை ஒன்று அமைச்சரவையின் கவனத்துக்காக சமர்ப்பிக் கப்பட வேண்டியிருந்தது. அதன்படி உயர் தொழில் நுட்ப நிறுவனத்தினால் வழங்கியிருந்த வரைபு செயற்திட்ட அறிக்கை அப்போதைய நகர திட்டமிடல் நீர் வழங்கள் மற்றும் உயர்கல்வி அமைச்சு, தேசிய திட்டமிடல் திணைக்களம், அரச தனியார் கூட்டுச் செயற்பாடுகளுக்கான தேசிய முகவராண்மை மற்றும் முதலீட்டுச் சபை என்பவற்றிற்கு அவர்களின் அவதானிப்புக்கள்/ பிரேரணைகள் பெற்றுக் கொள்வதற்காக அனுப்பப்பட்டிருந்தன. வரைபினை பரிசோதனை மேற்கொள்வதற்கு தேவையாக இருந்தமையால் அதற்காக குறிப்பிட்ட ஒரு காலம் தேவை என அப்போதைய நகர திட்டமிடல் நீர்வழங்கள் உயர்கல்வி அமைச்சு அறிவித்திருந்தது. அதே போல், அரச தனியார் கூட்டுச் செயற்பாட்டிற்கான தேசிய முகவராண்மை யினால் அந்த செயற்திட்ட அறிக்கைக்கு உரிய ஏனைய தகவல்கள், உயர் தொழிநுட்ப நிறுவனத்தில் இருந்து அழைத்திருந்த துடன் |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டு இருக்காததுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டு இரண்டு வருடங்கள் கடந்திருந்த போதிலும் விரிவான செயற்திட்ட அறிக்கை ஒன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | அத் தகவல்களை வழங்கும் படி அப்போதைய அமைச்சினால் உயர் தொழிநுட்ப நிறுவனத்துக்கு அறிவித்திருந்தது. அதே போல் இது தொடர்பாக அப்போது காணப்பட்ட அமைச்சினால் குறிப்பிட்ட அவதானிப்புக்கள்/ பிரேரணைகள் சமர்ப்பிக்கும் படி பல சந்தர்ப்பங்களில் அறிவித்திருந்த போதிலும் இதுவரை அந்த பிரேரணைகள் சமர்ப்பிக்கப் படாமையால் குறிப்பிட்ட விரிவான செயற்திட்ட அறிக்கை அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு முடியவில்லை. |
| (ஆ) | அரசாங்கத்தினால் கிராம மட்டத்தில் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி செயற்திட்டங்களின் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்புக்காக மனிதவளம் பெற்றுக்கொள்ளும் குறிக்கோளுடன் அமைச்சிற்கு பயிற்சி பெற்ற 7500 செயற்திட்ட உதவியாளர்கள் சேர்ப்பதற்காக 2019 மார்ச் 19 திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்த போதிலும் இதற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளில் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் மற்றும் சம்பளங்கள் பதவியணி ஆணைக்குழுவின் பரிந்துரை கிடைப்பதற்கு முன்னர் ஆட்சேர்ப் பதற்கான நேர்முகப் பரீட்சை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. இந்த ஆட்சேர்ப்பு தொடர்பான அலுவல் களுக்காக ரூபா 6.95 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் 2019 திசெம்பர் 18 திகதி அமைச்சரவை தீர்மானத்தின் படி இந்த ஆட்சேர்ப்புக்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | முறையான அங்கீகாரம் ஒன்று இன்றிய விடயங்களுக்காக செலவீடு செய்தல் மற்றும் அந்த செலவின் மூலம் நலன்கள் ஏதும் கிடைக்காமை தொடர்பாக கடுமையான கவனம் செலுத்தி உச்சமட்டமாக சரிசெய்தல் மேற்கொள்ளப்பட வேண்டும். | பிரதமரின் செயலாளரின் தலைமைத்துவத்தில் நடைபெற்ற குழுத் தீர்மானத்தின் படி குறிப்பிட்ட திணைக்களத்தின் மூலம் இணக்கப்பாட்டினை பெற்றுக் கொள்ளும் அடிப்படையில் 2019 ஜூன் 17 திகதி நேர்முகப் பரீட்சைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் நேர்முகப் பரீட்சை முடிவடைவதற்கு முன்னர் முகாமைத்துவ சேவைத் திணைக்களம் மற்றும் சம்பளங்கள் மற்றும் பதவியணி ஆணைக்குழுவின் பரிந்துரை பெற்றுக் கொள்ளப்பட்டது. தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் திருத்தம் கிடைக்கும் போது நடைபெற்றுக் கொண்டிருந்த நேர்முகப் பரீட்சை கணிசமான அளவு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததனால் அந்த பரிந்துரையை செயற்படுத்த முடியாமல் போனது. 2019 திசெம்பர் 18 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் இந்த ஆட்சேர்ப்பு இரத்துச் செய்வதற்கு முன்னர் இந்த செலவுகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பல்வேறு பாடத்தொகுப்புகளின் கீழ் தொழில் வல்லுனர்களின் விஷேடத் துவர்களின் சேவையை குறுகிய காலத்திற்கு பெற்றுக்கொள்வதற்காக மற்றும் தொழிநுட்ப நியமங்களுக்கு இணங்க வேதன பெகேஜ் ஒன்று வழங்கப்பட்டு அவர்களை அரச நிறுவனங்களுக்கு மற்றும் அரச தொழில் முயற்சிகளுக்கு இணைப்பதற்கு தேவையான அதிகாரங்களை கொண்ட அரச கம்பனி ஒன்றென மனிதவள சேவை முகவராண்மை 2016 ஜூன் 21 திகதி நிறுவப்பட்டிருந்தது. அமைச்சினால் சிரேஷ்ட ஆய்வு பகுப்பாய்வாளர் மற்றும் கனிஷ்ட ஆய்வு பகுப்பாய்வாளர் 02 பதவிகள் ஆக தற்காலிக அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக இரண்டு பேர்கள் முகவராண்மையினால் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். அதே போல் அவர்களுக்கான படிகள் கொடுப்பனவு செய்தல் அமைச்சினால் இந்த முகவராண்மை ஊடாக மேற்கொள்ளப்பட்டிருந்தது. கம்பனியினால் ஏனைய நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த தொழில் வல்லுனர் ஒருவர் மாத்திரம் இருந்ததுடன் கம்பனி நிறுவப்பட்ட திகதி முதல் இதுவரை 04 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும் அவற்றின் மூலம் எதிர்பார்த்த குறிக்கோளினை நிறைவேற்றப்பட்டிருக்காமையால் அதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 9,916,868 இற்கான செலவு பயனற்ற செலவொன்று என அவதானிக்கப்பட்டது. மேலும் இந்தக் கம்பனியை ஒழிப்பதற்காக 2019 ஒக்தோபர் 02 திகதி அமைச்சரவை குறிப்பொன்று அமைச்சரவை அலுவலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு இருந்தது என அவதானிக்கப்பட்டது. | திட்டமிட்டு அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த கம்பனியை நிறுவுவதன் பிரதான குறிக்கோள் பல்வேறு துறைகளை சேர்ந்த தொழில் வல்லுனர்கள்/ விஷேடத்துவமானவர்களுக்கு தொழிநுட்ப நியமங்களுக்கு இணங்க வேதனம் ஒன்று வழங்கப் பட்டு குறுகிய கால அடிப்படையில் சேர்க்கப்பட்டு அவர்களை அரச நிறுவனங்கள் மற்றும் அரசுக்கு சொந்தமான தொழில் முயற்சிகள் இணைப்பதாகும். முன்னைய தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் மூலம் சிரேஷ்ட ஆய்வு பகுப்பாய்வாளர்கள் மற்றும் கனிஷ்ட ஆய்வு பகுப்பாய்வாளர்கள் இரண்டு பதவிகள் தற்காலிக அடிப்படையில் அங்கீகரிக்கப் பட்டிருந்ததுடன் அதற்காக இருவர் கம்பனியினால் நியமனம் செய்யப்பட்டி ருந்தனர். அதே போல் குறிப்பிட்ட கம்பனியினால் வேறு நிறுவனங்களுக்கு ஒரு தொழில் வல்லுனர் சேர்க்கப்பட்டிருந்தது. கம்பனியின் பணிப்பாளர் சபையினால் கம்பனியை நிறுவிய குறிக்கோளை பெற்றுக் கொள்ளல் தொடர்ந்தும் வெற்றியளிக் காமையால் நிறுவனத்தை ஒழிப்பதற்காக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் கையொப்பத்துடன் அமைச்சரவை குறிப்பொன்று 2019 ஒக்தோபர் 03 திகதிய அமைச்சரவை அலுவலகத் துக்கு சமர்ப்பித்திருந்த போதிலும் ஏற்பட்டிருந்த அமைச்சரவை திருத்தம் காரணமாக இந்த அமைச்சரவை குறிப்பு கலந்துரையாடப்பட்டிருக்க வில்லை. |
| (ஈ) | 2018 ஆண்டிற்கான விஷேட பாதீட்டு பிரேரணை ஒன்றின் படி மீள்குடியேற்றம் மற்றும் புனர்வாழ்வு அளித்தல் பிரிவின் கீழ் தனியார் துறையினரால் தொழில் | இவ்வாறான செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது முன் மற்றும் | முன் ஆய்வொன்று மேற்கொள்ளப்படாமல் இந்த செயற்திட்டத்திற்காக பணம் ஒதுக்கப்படல் மேற்கொள்ளப் |

| | | | |
|---|---|---|---|
| | வழங்குவதற்கு திட்டமிட்டிருந்த புனர்வாழ்வு அளிக்கப்பட்டு மீண்டும் சமூகமயப்படுத்தப்பட்ட முன்னைய போராளிகளுக்காக சம்பள உதவி திட்டம் ஒன்று செயற்படுத்தும் போது சமூகச் சிக்கல்கள் வெளிப்பட்டிருந்தன. அதன் காரணமாக 2018 நவம்பர் 18 திகதி அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் படி வாழ்வாதார உதவி வழங்கும் விஷேட நிகழ்ச்சித் திட்டமொன்றிற்கு செயற்படுத்துவதற்காக சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட்ட பின்னர் 2019 பாதீட்டு பிரேரணைக்கு உட்படுத்துவதற்காக நடவடிக்கை எடுப்பதற்காக அறிவுரை வழங்கியிருந்த போதிலும் அச் செயற்திட்டத்தை செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. அதற்காக வருடாந்த பாதீட்டு மதிப்பீடுகளின் மூலம் வழங்கப்பட்டிருந்த ரூபா 100 மில்லியனுக்கான ஏற்பாடுகளை பயன்படுத்தியிருக்காததுடன் அவற்றில் ரூபா 90 மில்லியன் நி.பி.66 இன் மூலம் வேறு செலவு விடயங்களுக்காக மாற்றப்பட்டிருந்தது. | சம்பூரணமான சாத்தியக்கூறு ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டும். | பட்டிருந்த போதிலும் இந்த செயற்திட்டத்தை அமுல் நடத்துவதற்காக முயற்சி செய்யும் போது அநேகமான பல நடைமுறைச் சிக்கல்கள் ஏற்பட்ட காரணத்தினால் முன்னேற்றம் எதனையும் பெற்றுக்கொள்ள முடியாமல் போனது என |
| (உ) | மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ் வளிப்பு பிரிவின் கீழ் வட மற்றும் வடமத்திய மாகாணங்களில் வசிக்கும் கடன் சுமையால் தாக்கப்பட்டுள்ள பொதுமக்களுக்காக நுண்கடன் வசதிகள் வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தை செயற்படுத்து வதற்காக நிதியமைச்சின் நுண் நிதிக் கடன் திட்டம் தேர்வு முறைகள் மற்றும் வழிகாட்டலின் படி நிகழ்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தது. எனினும் கடன்வட்டி 14 சதவீதம் ஆகிய கூடிய பெறுமதி ஒன்றினை பெற்றிருத்தல் மற்றும் கவனம் செலுத்தப்படும் கடன் வரையறை ரூபா 20,000 தொகையை விட பொதுமக்களின் கடன்பட்டிருந்த தொகை கூடிய மட்டத்தில் காணப்படல் ஆகிய நடைமுறை சிக்கல்களின் காரணமாக இந்த செயற்திட்டத்தை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு முடியாமல் போனது. இதன் காரணமாக வருடாந்த செயற்திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 100 மில்லியன் தொகை மற்றும் குறைநிரப்பு மதிப்பீடுகளின் மூலம் ரூபா 50 மில்லியன் என்பவற்றை பயன்படுத்தி இருக்கவில்லை. | செயற்திட்டங்களை செயற்படுத்து வதற்கு முன்ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. | வட மாகாணத்தில் உள்ள 05 மாவட்ட செயலகங்களில் இந்த செயற்திட்டத்தை செயற்படுத்தும் போது அந்த 05 அலுவலகங்களில் ஏற்பட்டிருந்த சிக்கல்களின் காரணமாக இந்த செயற்திட்டத்தை செயற்படுத்துவதற்கு முடியாமல் இருந்தது எனவும் இந்த ஏற்பாடுகள் 2018 ஆண்டின் வரவு செலவுத் திட்ட உரையின் மீது அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டம் ஒன்றிற்காக கிடைத்திருந்தது என. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு அளிப்பு பிரிவுக்கு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் யுத்தம் காரணமாக சொந்த இடங்களை இழந்த குடும்பங்களுக்காக புதிய தொழிநுட்பத்தை பயன்படுத்தி சிக்கனமான கொங்கிரீட் பெனல் உடனான நிரந்தர வீடுகள் நிர்மாணிக்கும் செயற்திட்டத்தின் முதலாம் கட்டமாக கிழக்கு மாகாணத்தின் 03 மாவட்டங்களில் 1,000 வீடுகள் நிர்மாணிப்பதற்காக 2019 மே 17 திகதி ஒப்பந்த வேலை உடன்படிக்கை கையொப்பமிடப் பட்டிருந்தது. அந்த ஒப்பந்த வேலை உடன்படிக்கையின் 4.2 பந்தியின் பிரகாரம் 2019 ஆகஸ்ட் 13 திகதி நிதி உடன்படிக்கை கையொப்பமிட்ட பின்னர் 14 நாட்களுக்குள் குறிப்பிட்ட ஒப்பந்தக்காரரினால் செயலாற்றல் பிணை முறி சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக இந்த செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 260 மில்லியனுக்காக குறைநிரப்பு ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. | உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்ட கருமங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அந்த வீடுகள் நிர்மாணிக்கும் வேலை தற்போது ஆரம்பிக் கப்பட்டுள்ளதுடன் இந்த நிகழ்ச்சித் திட்டம் தாமதம் ஆவதற்கான காரணம் தேசிய கட்டிடங்கள் மற்றும் ஆய்வு அபிவிருத்தி நிறுவனத்தின் (NBRO) ஆலோசனை மீது புதிய தொழிநுட்ப முறை ஒன்றினை பயன்படுத்தி மாதிரி செயற்திட்டமாக இருந்தமை என. |

## 3.2 எதிர்பார்க்கப்பட்ட நலன்களை நெருங்காமை

திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி பிரிவு தொடர்பான பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது அமைச்சுக்கு சொந்தமான பயிற்சி நிறுவனங்களில் மாணவர்கள் கொள்திறன் 136,920 தொகை எனினும் சேர்க்கப்பட்டிருந்த மாணவர்களின் 111,642 தொகையாக காணப்பட்டமையால் அமைச்சுக்கு சொந்தமான வளங்கள் ஆக்கபூர்வமாக மற்றும் செயற்திறனுடன் பயன்படுத்துவதற்கு தேவையான உச்ச மாணவர் எண்ணிக்கையினை சேர்ப்பதற்கு முடியாமல் இருந்தது. மேலும் பயிற்சியை முடித்த பின்னர் பயிற்சி பெற்றவர்கள் தொழில் பெற்றுக் கொள்ளல் தொடர்பாக தொடர் நடவடிக்கை நிகழ்ச்சித் திட்டம் ஒன்று செயற்படுத்தப்படாதிருந்ததுடன் பயிற்சி பெற்றவர்கள் தொழில்களை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக தரவு முறைமை ஒன்றும் காணப்படவில்லை. | வள ஆக்கபூர்வமாக மற்றும் செயற்திறனுடன் பயன்படுத்தக் கூடிய விதமாக பாடநெறிகளுக்கு மாணவர்களை ஈர்க்கக் கூடிய வேலைத் திட்டம் ஒன்றினை தொடர்ந்தும் விரிவாக்கிக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பாடநெறி அபிவிருத்திக் காக விண்ணப்பிக்கும் செய்முறை ஒன்று மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக் குழுவினால் தயாரிக்கப் பட்டு தற்போது செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அதற்காக தேசிய பயிலுனர் மற்றும் தொழிற்பயிற்சி அதிகார சபை, திறன்தொழில் தொழிநுட்ப பல்கலைக் கழகம் உட்பட பயிற்சி நிறுவனங்கள் மற்றும் கைத்தொழில் துறையில் முக்கிய நிறுவனங்களுடன் இணைந்து பயிற்சி தரநிலை மற்றும் பாடவிதானங்கள் போதியளவு எண்ணிக்கை அபிவிருத்தி செய்வதற் காக வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டி ருந்தது என. |
| (ஆ) | மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு 2017 ஜனவரி முதல் மீளாய்வாண்டு செப்தெம்பர் வரையான காலப்பகுதியில் கைத்தொழில்களின் தேவைப்பாடு மற்றும் கேள்விகள் மீது 317 தொழில் வாய்ப்புகளுக்காக பாடவிதானங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டு இருந்ததுடன் 170 தொழில் வாய்ப்புக்களுக்காக தேசிய தொழில் தகைமைகளுக்காக சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தது. அவற்றில் கூடுதலான எண்ணிக்கை ஆகிய 21 சதவீதம் கணினிகள் மற்றும் அதனொடு இணைந்த தொழில் வாய்ப்புக்களுக்கு வழங்கப்பட்டிருந்தது என அவதானிக்கப்பட்டது. நிறுவனத்தின் கேள்வி மற்றும் கைத்தொழிலின் தேவை மீது பாடவிதான அபிவிருத்தி மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் முறையான செய்முறை ஒன்றின் படி | தொழிற்கல்வி தொடர்பாக முக்கிய காரணியாக இருப்பது பயிற்சி தர நிலை நிறுவுதல் மற்றும் பாடவிதான அபிவிருத்தி உலகளாவிய தேவை மற்றும் கைத்தொழில் களின் தேவையினை அடிப்படையாகக் கொண்டு பயிற்சி துறைகள் தொடர்பாக பயிற்சி தர நிலை நிறுவுதல், தொழிநுட்பம் சார் அபிவிருத்தியின் படி சென்று பாடநெறிகளை நவீன மயப்படுத்து வதற்கு பாடவிதான அபிவிருத்தி ஒன்று அத்தியவசியமான | ஒரு துறையில் பயிற்சி தர நிலையங்கள் மற்றும் பாடநெறிகள் போதியளவு எண்ணிக்கையானவை அபிவிருத்தி செய்து முடிவடைந்த பின்னர் அந்தத் துறையில் கைத்தொழிலாளர்கள் மற்றும் தரப்பினர்களை தொடர்பு கொண்டு அந்த பயிற்சி தர நிலை மற்றும் பாடவிதான போதியளவு எண்ணிக்கையானவை அபிவிருத்தி செய்து முடிவடைந்த பின்னர் அத் துறையில் கைத்தொழிலாளர்கள் மற்றும் தரப்பினரை தொடர்பு கொண்டு அந்த பயிற்சி தர நிலை மற்றும் பாடவிதானம் |

| | | | |
|---|---|---|---|
| | பாடவிதான அபிவிருத்தி செய்யப்படாமையால் நவீன உலகிற்குப் பொருத்தமான தொழில் களுக்காக உட்செல்லும் சந்தர்ப்பங்கள் குறைந்திருந்தது. | தாகும். அதன் காரணமாக பாடநெறிகளின் பண்புசார் தன்மை களின் அபிவிருக்காக உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்தது. | வெளியீட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது என. |
| (இ) | i. 1990 இன் 20 ஆம் இலக்க மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி சட்டத்தின் படி தேசிய தொழிற் தகைமையுடன் (NVQ) பாடநெறிகள் நடாத்துவதற்காக பயிற்சிப் பாடநெறிகள் பதிவு செய்யப்பட வேண்டியதுடன் பண்புசார் பாடநெறிகளை வழங்குவதற்கு அந்தப் பாடநெறிகளை அங்கீகாரம் பெறுதலும் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. எனினும் அமைச்சின் கீழ் செயற்படும் பல்கலைக்கழக கல்லூரிகள் உட்பட 06 நிறுவனங்களில் நடாத்தப்படும் 2566 பாடநெறிகளில் 683 பாடநெறிகள் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. மேலும் தனியார் துறை நிறுவனங்களினால் நடாத்தப் படுகின்ற பாடநெறிகளில் பண்புசார் தன்மை ஏற்படுத்துவதற்காக பாடநெறிகளை அங்கீகரிப்பதில் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டியிருந்தது. எனினும் மூன்றாம் நிலை மற்றும் தொழில்கல்வி ஆணைக்குழுவின் தகவல்களின் படி 2019 ஆண்டளவில் தொழில்கல்வி பாடநெறிகள் நடாத்தும் செல்லுபடியாகும் பதிவுகளை உடைய தனியார் துறையில் 729 நிறுவனங்கள் காணப்பட்ட அவற்றில் பதிவு செய்யப்பட்ட பாடநெறிகள் 2788 இல் அங்கீரிக்கப்பட்டிருந்த பாடநெறிகள் 613 மாத்திரமே. | மாணவர்களுக்கு பண்புசார் பாடநெறிகள் பெற்றுக்கொடுப்பதை உறுதிப்படுத்துவதற் காக பாடநெறிகளை அங்கீகாரம் பெறல் வேண்டும். | அங்கீகாரம் பெறுவதற்கா தேவையான மணித்தியால எண்ணிக்கை அடங்கி இருக்காத பாடநெறிகள் தவிர தற்போது தொழிற் பயிற்சி நிறுவனங்களில் அநேகமான பாடநெறி களை அங்கீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது. நடைமுறைத் துறையில் பாடநெறி அங்கீகரிப்பதற்காக தேவையான மணித்தியால எண்ணிக்கை பூர்த்தி செய்யப்படாததுடன் அவை குறுகிய கால பாடநெறி வகையைச் சேர்ந்தவை என. |
| | ii. மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவின் பதிவு செய்யப்பட்டிருந்த தொழிற்பயிற்சி பாடநெறிகள் நடாத்தும் அனைத்து நிறுவனங்களும் 2017 ஆண்டு முதல் தர முகாமைத்துவ முறைமை ஒன்று நிறுவி அதன் பண்புசார் தன்மை தொடர்பாக சான்றிழதழ் ஒன்று | பாடநெறிகளை பண்புசார் தன்மை யுடன் நடாத்துவதற்கு நிறுவனம் முறையான தர முகாமைத்துவ த்தை பேணப்பட்டு வர வேண்டும். | பதில் அளிக்கப்படவில்லை. |

ஆணைக் குழுவில் இருந்து பெற்றுக்கொள்ள வேண்டும் என திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்கல்வி அமைச்சின் 2016 பெப்ரவரி 26 திகதிய எம்எஸ்டீவீடீ/ எஸ்எஸ்டீபீ/2016-1 இலங்கங் கொண்ட சுற்றறிக்கையின் மூலம் கட்டாயப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் தொழிற்கல்வி பயிற்சி பாடநெறிகள் நடாத்தும் தனியார் மற்றும் அரச துறையில் 2740 பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் நாடுபூராகவும் நிறுவப்பட்டிருந்த போதிலும், 2019 நவம்பர் 19 அளவில் அவற்றில் 224 நிறுவனங்கள் மாத்திரம் தர முகாமைத்துவ சான்றிதழ் பெற்றிருந்தன.

(ஈ) i. 2017 ஆண்டு முதல் 2019 ஆண்டு வரை NVQ 5, 6 பாடநெறிகளை பூர்த்தி செய்திருந்த பயிற்சி நிலையங்களில் இருந்து வெளிச் செல்லும் பட்டதாரி மட்டத்தில் உள்ள பாடநெறிகளை கற்பதற்கு எதிர்பார்க்கும் மாணவர்களின் கூட்டுத்தொகை 7,099 இல் திறன் தொழில் தொழிநுட்ப பல்கலைக் கழகத்தின் கொள்திறனின் படி 1,920 மாணவர்கள் மாத்திரம் சேர்க்கப்பட்டிருந்தனர். அதன் காரணமாக தேசிய தொழில் தகைமைகள் 5, 6 பாடநெறிகளை கற்கும் பட்டதாரி பட்டம் ஒன்று எதிர்பார்க்கும் மாணவர்களுக்கு பல்கலைக் கழக கல்வி கிடைக்கும் சந்தர்ப்பத்தை இழந்துள்ளது.

பட்டதாரி மட்டத்தில் பாடநெறிகளை கற்பதற்கு எதிர்பார்க்கும் மாணவர்கள் அனைவருக்கும் அதற்காக சந்தர்ப்பம் வழங்கும் விதமாக பல்கலைக்கழகத்தின் கொள்திறனை அதிகரிக்க வேண்டும்.

பதில் அளித்திருக்கவில்லை.

| | | |
|---|---|---|
| ii. 6 பல்கலைக் கழக கல்லூரிகளில் தற்போது தேசிய தொழிற்தகைமை 5,6 மட்டத்தின் 22 பாடநெறிகள் நடாத்தப்பட்ட போதிலும், பட்டதாரி மட்டத்தில் பாடநெறிகள் நடாத்தப்படும் திறந்தொழில் தொழிநுட்ப பல்கலைக்கழகில் மேற்கூறிய பாடநெறிகளுக்கு சமமான பட்டதாரி பாடநெறிகள் 7 மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது. கல்லூரிகளில் நடாத்தப்படும் ஏனைய 15 பாடநெறிகளுக்காக சமமான பாடநெறிகள் காணப்படாமையால் அந்த பாடநெறிகளை கற்கும் மாணவர்களுக்கு அவர்கள் படித்த பாடத் தொகுப்பில் பட்டதாரி மட்டம் வரை கல்வி கற்பதற்கு முடியாதிருந்தது. | தேசிய தொழில் தகைமை மட்டம் 5,6 பாடநெறிகளுக்கு சமமான பட்டதாரி மட்டம் வரை கற்பதற்கு முடியுமான விதத்தில் திறந்தொழில் தொழிநுட்ப பல்கலைக் கழகங்களில் பாடநெறிகள் ஏற்படுத்த வேண்டும். | பதில் அனுப்பியிருக்கவில்லை. |

| | | | | |
|---|---|---|---|---|
| (உ) | i. | தொழிற்பயிற்சி நிறுவனங்களின் மூலம் உருவாகும் திறன் தொழிலாளர்கள் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில்களில் கைத்தொழில் தேவைகளுக்காக ஒவ்வாமை, பல்வேறு தொழில் கல்விகள் மற்றும் பயிற்சி நிறுவனங்களினால் அறிமுகப் படுத்தியுள்ள பாடநெறிகளை கடைபிடிக்கும் பயிற்சி செய்முறை ஒன்று அந்தத் தேவையை வெற்றி அளிப்பதற்காக போதியளவாக காணப்படாமை, முக்கிய கைத்தொழில் இலக்குகளை நோக்கி பாடநெறிகள் அபிவிருத்தி அடைந்திருக்காமை, தொழில்களை எதிர்கொள்ளும் பாடநெறிகள் குறைதல் போலவே கைத்தொழில் மற்றும் தொழிநுட்பக் கல்வி நவீன மயப்படுத்தப்படாமை ஆகிய காரணங்களினால் தொழிற் சந்தையில் தொழில் மற்றும் திறன் இடையே இணக்கமின்மை ஒன்று ஏற்படுதல், திறமைகள் பொருந்தாமை போலவே தொழிலை இலக்காக கொண்ட பயிற்சிப் பாடநெறிகள் காணப்படாமை ஆகிய காரணங்களினால் தொழிற் சந்தையில் பொருத்தமான தொழிற் சேனையொன்றினை ஏற்படுத்துவதற்கு முடியாதிருந்தது. | இளைஞர், மகளிர் மற்றும் உயர்கல்வி தகைமைகள் உடைய தொகுதிகள் இடையே காணப்படும் உயர்ந்த தொழில் இன்மை பொருளாதாரத்தின் தொடர்ந்தும் காணப்படும் சிக்கல் ஒன்றாகியிருந்தது. இதன் காரணமாக தொழிற் சந்தைக்கு பொருந்தக் கூடிய விதமாக தொழிற் சேனையினை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | Automobile துறையில் பெண்கள் பங்களிப்பினை முன்னேற்றுதல் மற்றும் பெண்களின் தொழில் மேம்படுத்து வதற்கான திறன் துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் மூலம் பின்வரும் 2 புதிய பாடநெறிகள் அறிமுகப் படுத்தப்பட்டிருந்ததுடன் பெண்களின் தொழில் சந்தர்ப்பங்கள் அதிகமாக காணப்படும் துறைகளை இனங்கண்டு புதிய பாடநெறிகளை தயாரித்தலும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தற்போது வெளிநாட்டு தொழில் சந்தர்ப்பங்கள் தொடர்பாக கூடிய கவனம் செலுத்தப் பட்டு உரிய நடவடிக்கை எடுப்பதற்கு தீர்மானிக்கப் பட்டுள்ளதுடன் அதன் படி எதிர்காலத்தில் வெளிநாட்டு தொழில் சந்தைக்காக தொழிலாளர்கள் ஏற்றுக் கொள்ளப்பட்ட சான்றிதழ்கள் உடைவர்களாக உயர்ந்த மட்டத்துக்கு கொண்டு வருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

| | | | |
|---|---|---|---|
| ii. | உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழிற்சந்தை தேவையினை இனங்கண்டு அதன் அடிப்படையில் புதிய பாடநெறிகளை ஏற்படுத்தல் மற்றும் பாடவிதான அபிவித்தி செய்வதற்கான கவனம் பலவீன மட்டத்தில் காணப்பட்டது. அதன் படி 2017 ஆண்டின் போது பல்கலைக்கழக கல்லூரிகள் உட்பட 12 நிறுவனங்களில் 4 நிறுவனங்கள் மாத்திரம் 16 புதிய பாடநெறிகளை அறிமுகப்படுத்தி இருந்ததுடன் 2018 ஆண்டின் போது 3 நிறுவனங்களினால் மாத்திரம் 21 பாடநெறிகள் அறிமுகப்படுத்தப்பட்டிருந்தது. | தொழிற்சந்தைக்கு பொருத்தமானவாறு தொழிற்சேனை ஒன்றினை உருவாக்கக் கூடிய விதமாக காலத்துக்கு காலம் பாடநெறிகளை அபிவிருத்தி செய்ய வேண்டும். | சுகாதார, ஹோட்டல் மற்றும் சுற்றுலா, நிர்மாண வேலை, பொறியியல் தகவல் தொழிநுட்ப துறைகளில் தொழிற்பயிற்சி சந்தர்ப்பங்களை விரிவாக்கல், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தொழில் தேவைகளை பூர்த்தி செய்யும் குறிக்கோளுடன் அத் துறைகளில் முக்கியமான தொழிற்சாலை உரிமையாளர்களின் பிரதிநிதித்துவத்துடன் கூடிய துறைசார் திறன் குழுக்களை அமைப் பதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளது. அந்த சபைகளில் பிரேரணைகள் மற்றும் கருத்துரைகளின் படி கைத்தொழில் தொழிற்கல்வி மற்றும் பயிற்சித் துறைகளில் திறன் இடைவெளியை இனங்கண்டு பாடவிதான அபிவிருத்தியை நாளதுவரை ஆக்குவதற்கு TVEC நிறுவனத்தின் மூலம் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. |
| (ஊ) i. | கடுநாயக்க பொறியியல் தொழில் நுட்ப நிறுவனத்தை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் அலுவல்கள் 2020 ஏப்ரல் மாதம் பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப் பட்டிருந்த போதிலும் 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே 87 சதவீதம் மற்றும் 91 சதவீதம் ஆகக் காணப்பட்டது. செயற்திட்டத்தின் முன்னேற்ற அறிக்கைகளின் படி 2019 திசெம்பர் 24 வரை புதிய கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு ஒப்படைக்கப் பட வேண்டியிருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதி வரை குறிப்பிட்ட விடயம் நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை. தற்போது காணப்படும் கட்டிடத்தின் புனர்நிர்மாண வேலைகளின் பௌதீக | எதிர்பார்த்த குறிக்கோள்கள் கால ரீதியாக நிறைவேறுமாறு செயற்திட்ட நிதியம் உச்ச மட்ட வினைத் திறனுடன் பயன்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கட்டிடத்தின் நிர்மாண வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் ஆய்வுகூட உபகரணங்களை பரிசோதனை செய்யும் அலுவல்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்காமையின் காரணத்தினால் புதிய கட்டிடத்தை குறிப்பிட்ட தினத்தில் ஒப்படைப்பதற்கு முடியாது போனது. நிறுவனத்தில் கல்வி நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்படுவதனால் சில இடங்கள் (ஆய்வுகூடம்) குறிப்பிட்ட அலுவல்களுக்காக விடுவிப்பதற்காக முடியாமை தற்போது காணப்படும் கட்டிடத்தின் அலுவல்கள் தாமதம் ஆனதற்கு |

| | | |
|---|---|---|
| முன்னேற்றம் 75 சதவீத மட்டத்தில் காணப்பட்டது. புதிய ஆய்வுகூட உபகரணங்கள் கொள்வனவு செய்து அவற்றை பொருத்தும் கருமங்கள் 2019 திசெம்பர் 24 திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அதன் பௌதீக முன்னேற்றம் 50 சதவீதமாக இருந்தது. எவ்வாறாயினும், பயிற்சி பாடநெறிகளில் பாடவிதானங்களை முன்னேற்றுவதற்காக எடுக்கப் பட்டிருந்த நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம் 5 சதவீதம் ஆகும். | | காரணமாக இருந்தது. பாடவிதானங்களை அபிவிருத்தி செய்தல் தொடர்பான பௌதீக முன்னேற்றம் குறைவடைவதற்கு பாடவிதானங்களை நவீன மயப்படுத்துவதற்கு தேவையான பதவியணியினரை தெரிவு செய்வதில் ஏற்பட்ட தாமதத்தின் காரணத்தினால் ஆகும். |
| ii. மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்டிருந்த கூட்டுத் தொகை ரூபா 738,588,403 இற்கான பெறுமதியுடைய நேர் கொடுப்பனவுச் செலவுகள் என கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஆண்டிற்கான அனைத்துச் செலவுகளையும் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆண்டிற்காக போதியளவு பாதீட்டு ஏற்பாடுகள் ஒதுக்கப்படாமையால் கணக்கீடு செய்வதற்கு முடியாதிருந்தது. |

**3.3 செயற்திட்டங்கள் நிறைவேற்றுவதில் தாமதம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2017 ஜுன் 20 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி 2017 – 2019 இடைக்கால பாதீட்டு சட்டகத்தின் கீழ் ரூபா 434 மில்லியன் கிரயம் ஒன்று மேற்கொண்டு திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா பல்கலைக்கழக கல்லூரி நிறுவுவதற்காக அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக 2018 ஆண்டின் போது ரூபா 50 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அந்தப் பணத்தினால் பல்கலைக் கழகத்தை சுற்றி மதில் நிர்மாணித்தல் மற்றும் பல்கலைக் கழகம் நிர்மாணிப்பதற்காக உசாத்துணை சேவையை பெற்றுக்கொள்வதற்காக பொறுத்தமான நிறுவனம் ஒன்று தெரிவு செய்தல் | செயற்திட்டங்கள் தாமதம் இன்றி செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | பதில் அனுப்பியிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | உட்பட செலவுகள் மேற்கொள்வதற்காக ரூபா 5,897,359 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. தேசிய தொழில் தகைமை 5 மற்றும் 6 மட்டங்களில் பாடநெறிகள் ஆரம்பிப்பதற்காக 2020 ஆண்டளவில் இந்த செயற்திட்டத்தை பூர்த்தி செய்வதற்குத் திட்டமிடப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும் நிர்மாண வேலைகள் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் போது இச் செயற்திட்டதிற்காக ரூபா 20 மில்லியன் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், அப்பணத்தில் 2019 ஒக்தோபர் 15 திகதியளவில் ரூபா 3,034,324 இற்கான தொகையொன்று கல்லூரி வளவில் பதவியணியினருக்கு விடுதியொன்று நிர்மாணித்தல் மற்றும் உசாத்துணை சேவை வழங்குவதற்காக செலவிடப்பட்டிருந்தது. தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த தேவைகளை மதிப்பீடு செய்யும் அறிக்கையின் படி இந்த செய்திட்டதிற்காக ஒதுக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக மிகைச் செலவொன்று செலவிட நேரிடுமாயின் அதனை துறைசார் திறன் அபிவிருத்தி செயற்திட்டத்தின் மூலம் நிதி பெற்றுக்கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. எனினும், அச்செயற்திட்டம் 2020 ஆண்டுடன் முடிவடைவதனால் தேவையான மேலதிக நிதியம் குறிப்பிட்ட செயற்திட்டத்தின் ஊடாக பெற்றுக்கொள்ளக் கூடிய இயலுமை தொடர்பாக ஆபத்து ஒன்று காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | | |
| (ஆ) | 2017 செப்தம்பர் 12 திகதி நடைபெற்ற அமைச்சரவை தீர்மானத்திற்கு மற்றும் 2017 நவம்பர் 9 திகதிய எம்எப்/என்டீ/சீஎம்/2017/202 இலக்கங் கொண்ட நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் கடிதத்தின் படி 2017 பாதீட்டு பிரேணையின் கீழ் மாத்தறை தேசிய தொழில்பயிற்சி நிறுவனம் ஒன்று நிறுவுவதற்காக | -மேற்படி- | 2017 பாதீட்டு பிரேரணையின் கீழ் 2017 செப்தம்பர் 12 திகதி உத்தேச செயற்திட்டத்தின் வடிவமைப்பு, ஒப்பந்த வேலை மற்றும் நிர்மாண வேலை முகாமைத்துவம் மற்றும் நிர்மாணித்த பின்னரான நுண்ணாய்வுப் பின்னரான பரிசோதனைக் காக |

| | | | |
|---|---|---|---|
| | ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 200 மில்லியன் தொகையினை பயன்படுத்தி அதன் ஆரம்ப நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்கும், மீதியான கிரயத்தை திறன் துறைசார் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஏற்பாடுகளின் மூலம் மேற்கொள்ளும் நோக்கதுடன் கிளிநொச்சி இலங்கை ஜேர்மன் பயிற்சி நிறுவனத்தில் 400 மாணவர்களுக்காக ரூபா 300 மில்லியனிற்கான ஒட்டுமொத்த கிரயம் ஒன்றின் கீழ் மாணவர் விடுதி ஒன்று நிர்மாணிப்பதற்காக அங்கீகரிக்கப்பட்டிருந்தது. 2018 ஆண்டின் போது ஒதுக்கப்பட்ட பணத்தில் இருந்து உசாத்துணை சேவைக் கட்டண கொடுப்பனவிற்காக ரூபா 6,028,015 ற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்ததுடன், 2019 ஆண்டிற்காக ரூபா 100 மில்லியன் தொகையொன்று ஒதுக்கப்பட்டிருந்தது. எனினும், ஆண்டின் போது விடுதி நிர்மாணிப்பதற்காக பொறுத்தமான ஒப்பந்தக்காரர் ஒருவரை தெரிவு செய்தல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குறிப்பிட்ட திறன் துறைசார் அபிவிருத்தி செயற்திட்டம் 2020 ஆண்டில் முடிவடைவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. | | ஆலோசகர் ஒருவரை பெற்றுக்கொள்ளல் தாமதமாகியிருந்தது. கடந்த 2018 மற்றும் 2019 ஆண்டுகளின் போது திறன் துறைசார் அபிவிருத்தி பிரிவிற்கு ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் வரையறுக் கப்படல், அமைச்சுக்கள் அடிக்கடி மாற்றடைதல், பெறுகைக்குழு அங்கத்தவர்கள் நியமனம் செய்தலில் தாமதம் ஏற்படல் மற்றும் கடமைசார்/ சுகாதார காரணங்களினால் பெறுகைக்குழு அங்கத்தவர் கள் வெளியேறல் ஆகிய காரணங்களினால் செயற்திட்டத்தை செயற்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டது. |
| (இ) | சமுத்திர பல்கலைக் கழகத்தில் பண்புசார் தண்மையுடைய பட்டப் பாடநெறிகள் செயற்படுத்துவதற்காக மிகவும் இடவசதியுடைய வளவொன்று ஏற்படுத்தும் குறிக்கோளுடன் புதிய பல்கலைக்கழக வளவொன்றினை அபிவிருத்தி செய்வதற்ாக கொரியா சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை(KOIKA) கடன் வசதிகள் வழங்குவதற்காக முன்வந்திருந்தது. எனினும், 2017 ஆண்டு முதல் அதற்காக பொறுத்தமான காணி ஒன்றினை உரித்தாக்குவதற்கு இயலாமல் போன காரணத்தினால் மீளாய்வாண்டு இறுதி அளவிலும் செயற்திட்டம் செயற்படுத்தப் பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | காணி உரித்தாக்களுக்காக இணைந்த அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. கொய்கா விஷேடத்துவ குழு சமுத்திர பல்கலைக்கழகத்துடன் பல தடவைகள் கலந்துரையாடி தயாரிக்கப்பட்டிருந்த பிரதான வரைபின் படி இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் கல்வி மற்றும் ஆய்வு வலிமைகளை பசுமை எண்ணக்கரு ஊடாக முன்னேற்றம் செய்யும் செயற்திட்ட பிரேரணை 78.63 மில்லியன் அமெரிக்கா டொலர் உச்சமட்ட கடன் தொகையுள் செயற்படுத்துவதற்கு |

| | | |
|---|---|---|
| | | அமைச்சரவை விஞ்ஞாபனம் ஒன்று தயாரித்திருந்த போதிலும், அமைச்சுக்கள் மாற்றமடைந்ததால் மீது அது கையொப்பமிட்டி ருக்கவில்லை என. |

**3.4 உள்நாட்டு நிதியங்களில் இருந்து செயற்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரிவின் பன்முகப்படுத்தப்பட்ட பாதீடு, உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் கம்பெரலிய துரித கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தது. அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் காணப்பட்டன. | | |
| (i) பன்முகப்படுத்தப்பட்ட பாதீடு – உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பொதுமக்களின் சமூக பொருளாதார வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும் குறிக்கோளுடன் ஒரு பாராளுமன்ற அங்கத்தவருக்கு வருடாந்தம் ரூபா 10 மில்லியன் தொகை ஏற்பாடுகள் இந்த நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படுகின்றது. 2019 ஆண்டிற்காக அதன்படி, ரூபா 2,350 மில்லியன் தொகை ஒதுக்கப்பட்டிருந்ததுடன், ரூபா 2,196 மில்லியன் பெறுமதியுடைய 21,263 செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப் பட்டிருந்ததுடன் ரூபா 1,418 மில்லியன் பெறுமதியான 20,612 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. ஏற்பாடுகளில் 40 சதவீதம் பயன்படுத்தப்படாதிருந்ததுடன், அங்கீகரிக்கப்பட்ட செயற்திட்டங்களில் 651 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | திட்டமிட்டிருந்தவாறு நிதியங்களை ஆக்கபூர்வமாக பயன்படுத்த வேண்டும். | 2019 செப்தம்பர் 09 திகதிய 5/2019 இலக்கங் கொண்ட தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின் மூலம் ஏற்பாடுகளில் மேலும் 10 சதவீதம் சேமிக்கும் குறிக்கோளுடன், முக்கியத்துவமற்ற செயற்திட்டங்கள் மற்றும் அது வரை ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்களை செயற்படுத்துவதை தற்காலிகமாக இடைநிறுத்தும் படி அறிவிக்கப்பட்டிருந்தது. நிதியமைச்சினால் அனைத்து மாவட்ட செயலாளர் களுக்கும் வேலைகள் ஆரம்பிக்கப்படாத செயற்திட்டங்களை மீண்டும் மீளாய்வு செய்து அறிவிக்கும் வரை தற்காலிகமாக இடை நிறுத்தும்படி அறிவித்திருந்த துடன், உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் நாட்டில் ஏற்பட்ட நிலைமை மற்றும் ஜனாதிபதி தேர்தலுக்காக பிரகடனப்படுத்தியிருத்தல் ஆகிய விடயங்கள் மீது |

| | | |
|---|---|---|
| | | எதிர்ப்பார்த்த முன்னேற்றத்தை பெற்றுக்கொள்ள முடியாமல் போனது என. |
| (ii)கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சி திட்டத்தை செயற்படுத்துவதற்காக 2019 பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 13,825 மில்லியன் ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தது. மாவட்ட செயலாளர்களுக்கு மற்றும் அமைச்சுத் தலைவர்களுக்கு ரூபா 13,154 மில்லியன் பெறுமதியான 8248 செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டு அச்செயற்திட்டங்களை செயற்படுத்துவதற்காக 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 13,154 மில்லியன் இற்கான ஏற்பாடுகள் வழங்கியிருந்த போதிலும் அத்திகதியில் உள்ளவாறு ரூபா 4584 மில்லியன் பெறுமதியான 4528 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. அதன்படி, பாதீட்டு ஏற்பாடுகளில் 67 சதவீதம் பயன்படுத்தப்பட்டி ருக்காதுடன் 3272 செயற்திட்டங்கள் செயற்படுத் தப்பட்டிருக்கவில்லை. மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச அலுவலகங்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்த கணக்காய்வு பரிசோதனைகளின் படி மகளிர் மற்றும் சிறுவர் விவகார அலுவல்கள் மற்றும் உலர்வலய அபிவிருத்தி அமைச்சிற்கு 56 செயற்திட்டங்களுக்காக ரூபா 127 மில்லியன் தொகை ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்த போதிலும், 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செயற்திட்டங்கள் ஏதும் பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன், அவற்றில் 19 செயற்திட்டங்களுக்காக ரூபா 56.9 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. நுவரெலிய பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் செயற்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டிருந்த 350 | -மேற்படி- | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டங்களில் 150 செயற்திட்டங்கள் மாத்திரம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. மேலும், பொலன்னறுவ வெலிகந்த பிரதேச செயலக அதிகார பிரதேசத்தில் செயற்திட்டமொன்றில் நிறைவேற்றப்படாத வேலைப் பகுதிகளுக்காக ரூபா 114,442 தொகை செலுத்தப்பட்டிருந்தது. நுவரெலியவில் 02 பாதைகளை அபிவிருத்தி செய்யும் 02 செயற்திட்டங் களுக்காக எதிர்ப்பார்த்த நலன்கள் கிடைத்திருக்கவில்லை. | | |
| (iii) | உட்கட்டமைப்பு வசதிகளின் பண்புசார் தன்மைகளை முன்னேற்றுவதுடன் பொதுமக்களின் வாழ்வாதார அபிவிருத்திக்காக உதவி செய்தல் மற்றும் பொருளாதார அபிவிருத்தியை தீவிரப் படுத்தும் குறிக்கோளுடன், செயல்படுத்தப்பட்ட கம்பெரலிய கடின கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்திற்காக 2019 பாதீட்டு மதிப்பீட்டின் மூலம் ரூபா 48,000 மில்லியன் ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தது. அவற்றில் ரூபா 47,283 மில்லியன் பெறுமதியான 117,354 செயற்திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அவற்றிலும் 105,203 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு ரூபா 34,480 மில்லியன் பெறுமதியான 101,391 செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருந்துடன், 12,151 செயற்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. மாவட்ட செயலகங்கள் மற்றும் பிரதேச அலுவலகங்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்த கணக்காய்வுப் பரிசோதனைகளின் படி 06 செயற்திட்டங்களில் நிறைவேற்றப்படாத விடயங்களுக்காக ரூபா 3.9 மில்லியன் செலுத்தியிருத்தல், 12 செயற்திட்டங்களில் எதிர்பார்த்த நலன்கள் கிடைத்திருக்காமை, 05 செயற்திட்டங்கள் தாமதம் அடைதல் | -மேற்படி- | -மேற்படி- |

| | |
|---|---|
| அங்கீகரிக்கப்பட்டிருந்த செயற்திட்டங்கள் செயற்படுத்தப்படாமல் கைவிடப்பட்டிருத்தல் மற்றும் செயற்திட்டங்களுக்கான செயற்திட்ட மதிப்பீடு கோப்பில் இடப்பட்டிருக்காமை போன்ற செயற்திட்டங்களை செயற்படுத்துவதில் காணப்பட்ட பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன. | 533<br>84 |

**3.5 பெறுகைகள்**

-------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | வருடாந்தம் கேள்வி அழைப்பின் மூலம் வழங்குனர்கள் தெரிவு செய்யப்படாமல் 2012 ஆண்டு முதல் திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சின் சிற்றூண்டிச்சாலை ஒரே வழங்குனரினால் நடாத்தப்பட்டு வந்திருந்ததுடன், அதற்கான சேவை உடன்படிக்கை அல்லது 2019 ஆண்டு வரையான காலப்பகுதிகள் தொடர்பாக சேவை நீடிப்பு தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | அமைச்சின் சிற்றுண்டிச்சாலை 2012 ஆண்டு முதல் கூறுவிலைகள் அழைக்கப்பட்ட போதிலும், பெறுகை வழிகாட்டல் மூலம் ஏற்பட்டிருந்த பிரதான விலகள் காரணமாக வழங்குனர் ஒருவர் தெரிவு செய்தல் உரிய முறையில் மேற்கொள்வதற்கு முடியாதிருந்ததெனவும், எனினும், சிற்றுண்டிச்சாலையை இடையறாமல் நடாத்திச் செல்லல் அத்தியவசியமாக இருந்ததால் பெறுகை குழுவின் மூலம் அவ்வவ் சந்தர்ப்பங்களில் அப்போது சேவை வழங்கி வந்த வழங்குனருக்கே வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டது என. |
| (ஆ) | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரிவு தொடர்பாக தயாரிக்கப்பட்டிருந்த பெறுகை திட்டம், பெறுகை வழிகாட்டல் கோவையின் 4.2.1 வழிகாட்டலின் பிரகாரம் தயாரித்திருக்கவில்லை. பெறுகை கைநூலின் 4.2.1 படிவத்தின் பிரகாரம் விரிவான பெறுகை திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | அடுத்த வருடத்திற்கான பெறுகை திட்டம் விரிவாக தயாரிப்பதற்கும், ஆண்டின் போது அதனை நாளதுவரை ஆக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், |

| | | |
|---|---|---|
| (இ) அமைச்சின் உசாத்துணையாளர் ஒருவருக்காக தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரிவினால் ரூபா 6,975,000 தொகை பெறுமதியான வாகனம் ஒன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அது பெறுகை திட்டத்தில் காட்டப்பட்டிருக்கவில்லை. மேலும், பெறுகை வழிகாட்டல் கோவையின் 5.4.10 வழிகாட்டலின் பிரகாரம் பண்டங்கள் கொள்வனவு செய்யும் போது வைக்கப்பட வேண்டிய 10 சதவீத செயலாற்றல் பாதுகாப்பு முறி பெற்றிருக்காததுடன், இலக்கம் பீஎப்டீ/பீஎம்டீ/சீஜஎன்/2016/02 மற்றும் 2016 ஜுன் 17 திகதிய நிதியமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் திருப்பிச் செலுத்தப்படாத கேள்வி வைப்பொன்றும் பெற்றிருக்கவில்லை. | பெறுகை அலுவல்கள் திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், அங்கு உரிய சட்டங்கள் விதிகளுக்கு நேரொத்ததாக இருக்க வேண்டும். | அவசர தேவைகள் மீதான விண்ணப்பங்களை அடிப்படையாகக் கொண்டு அமைச்சின் உசாத்துணையாளர் ஒருவருக்கு வாகனம் ஒன்று கொள்வனவு செய்ய நேரிட்டமையால் பிரதான பெறுகைத் திட்டத்தில் குறிப்பிட வில்லை. எதிர்கால பெறுகை அலுவல்களின் போது ஒப்பந்தத் தொகையில் 10 சதவீதத்திற்கு குறையாத பொறுத்தமான நிதி பாதுகாப்பு முறியொன்றின் மூலம் ஈடுபாட்டுப் பொறுப்புக் களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும், அவசர தேவைகள் மீது கூறுவிலை பதிவேடுகள் குறிப்பிட்ட வழங்குனரிடம் திருப்பி ஒப்படைக்கப்பட்டிருந்ததனால் அச் சந்தர்ப்பத்தில் திருப்பி செலுத்தப்படாத கேள்வி வைப்பு பெற்றுக்கொள்ளல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் பிரிவிற்குரிய வாகனங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |

| | | |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த வாகனங்களை ஒதுக்கும் அட்டவணைகளின் படி அமைச்சுக்கு சொந்தமான 88 வாகனங்கள் காணப்பட்டன. அவ் வாகனங்களின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர் என தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியிருப்பு மற்றும் புனர்வாழ்வளித்தல், வடக்கு அபிவிருத்தி மற்றும் இளைஞர் விவகார அமைச்சு ஆக இருக்க வேண்டிய போதிலும் அவற்றில் 70 வாகனங்களின் பதிவு செய்யப்பட்ட உரிமையாளர்கள் வேறு நிறுவனங்கள் மற்றும் அமைச்சுக்கள் என அவதானிக்கப்பட்டது. | உரிமையாளரின் பெயரில் பதிவு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். | அடிக்கடி அமைச்சின் விடயப்பரப்பு மாற்றமடைவதனால் வழமையாக அவ்வாறான சந்தர்ப்பங்களில் வாகனங்களின் உரிமை மாற்றும் வசதியின்மை ஏற்படுவதுடன், தற்போது வாகனங்களை பதிவு செய்து உரிமையை மாற்றுவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என. |
| 2019 திசெம்பம் 31 திகதியில் உள்ளவாறு அமைச்சுக்கு சொந்தமான வாகன எண்ணிக்கையை விட 14 வாகனங்கள் மிகையாக காட்டப்பட்டிருந்ததுடன், அவற்றிற்காக ரூபா 7,481,216 ற்கான செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்ததென அவதானிக்கப்பட்டது. மேலும், இந்த அமைச்சிற்கு சொந்தமான 22 வாகனங்கள் வேறு அமைச்சுகளுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 5,061,813 தொகையும் ஏனைய அமைச்சுக்களுக்கு சொந்தமான 07 வாகனங்களுக்காக ரூபா 801,693 தொகையுமாக செலவுகள் மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்தன. | வாகனங்கள் தொடர்பாக முறையான கட்டுப்பாடொன்று மேற்கொள்ளப்பட வேண்டும். | பதிலளித்திருக்கவில்லை. |
| அமைச்சுக்கு சொந்தமான 10 வாகனங்கள் மாவட்ட கூட்டிணைப்பு குழுத் தலைவர்களுக்கு மற்றும் அபிவிருத்தி செயற்திட்ட மேற்பார்வை மந்திரிமார்களுக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அதற்காக திருத்த செலவுகள் சேவைச் செலவுகள், டயர் மற்றும் டியுப் | வாகனங்கள் தொடர்பாக முறையான கட்டுப்பாடொன்று மேற்கொள்ளப்பட வேண்டியதுடன், செலவுக் கட்டுப்பாடு தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டும். | அபிவிருத்தி செயற்திட்ட மேற்பார்வை மந்திரிமார் மற்றும் மாவட்ட கூட்டிணைப்புக் குழுத் தலைவர்களுக்கு சாட்டப்பட்டுள்ள வாகனங்களுக்காக சேவைகள் வழங்கல் திருத்த வேலைகள் |

| | | | |
|---|---|---|---|
| | செலவுகள் மற்றும் காப்புறுதிச் செலவுகளாக ரூபா 5,111,587 தொகை அமைச்சினால் செலவிடப்பட்டிருந்தது. | | மேற்கொள்ளல், பட்டரி மற்றும் டயர் வழங்குதல் ஆகிய அலுவல்கள் இந்த அமைச்சினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என பிரதமர் அலுவலகத்தினால் வழங்கப்பட்டிருந்த கட்டளைகள் மற்றும் அமைச்சரவை தீர்மானங்களின் படி செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என |
| (ஆ) | திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி பிரிவுக்குரிய வாகனங்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| | 2017 மார்ச் 24 திகதி ரூபா 39,283,600 தொகைக்கு முன்னைய இராஜாங்க அமைச்சருக்காக கொள்வனவு செய்திருந்த மோட்டார் வாகனம், கொள்வனவு செய்வதற்குரிய நிபந்தனையின் படி அப்போதைய இராஜாங்க அமைச்சர் பயன்படுத்திய வாகனத்தை நிதியமைச்சிற்கு திருப்பி ஒப்படைக்க வேண்டியிருந்தது. எனினும், 2019 திசெம்பர் 31 திகதி வரை அதனை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. இராஜாங்க அமைச்சர் அமைச்சிலிருந்து மாறிச் செல்லும் போது இந்த இரண்டு வாகனங்களையும் நீர்ப்பாசன மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவ அமைச்சுக்கு எடுத்துச் சென்றிருந்ததுடன், மீளாய்வாண்டு இறுதித் திகதி வரை இந்த இரண்டு வாகனங்களின் உரிமை திறன் அபிவிருத்தி மற்றும் தொழில்பயிற்சி அமைச்சின் பெயரில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | -மேற்படி- | இந்த வாகனம் இராஜாங்க அமைச்சரின் ஏனைய உத்தியோக பூர்வ வாகனங்களுடன் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் அதனை நிதியமைச்சிற்கு திருப்பி ஒப்படைக்க முடியாதிருந்தது. இந்த வாகனம் நீர்ப்பாசன மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சிற்கு ஒப்படைக்கும் படி மேற்கொள்ளப்பட்ட கோரிக்கையின் படி அதற்காக இந்த அமைச்சின் இணக்கத்தை தெரிவித்த போதிலும் இது வரை உரித்தாக்குவதற்கு தேவையான ஆவனங்கள் இந்த அமைச்சிற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | 2010 ஏப்ரல் 29 திகதிய 146 இலக்கம் கொண்ட பாதீட்டு சுற்றறிக்கையின் பிரகாரம் புதிய அமைச்சரவை நியமனம் செய்வதற்கு முன்னர் காணப்பட்ட அமைச்சுக்களின் அனைத்து அமைச்சர்களின் / பிரதி | சுற்றறிக்கையின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். | அமைச்சரவை திருத்தங்களுடன் கௌரவ அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்த வாகனங்கள் அவர்களினால் புதிய அமைச்சிக்கு எடுத்துச் சென்ற |

| | | |
|---|---|---|
| அமைச்சர்களின் பதவியணியினருக்கு வழங்கியிருந்த அனைத்து வாகனங்களும் குறிப்பிட்ட அமைச்சுக்கு ஒப்படைக்க வேண்டியிருந்தது. எனினும், 2017 மே மாதம் அமைச்சரவை மாற்றங்களின் பின்னர் அமைச்சுப் பதவியணியினருக்கு வழங்கியிருந்த அமைச்சின் பேரில் காணப்பட்ட 04 வாகனங்கள் 2019 திசெம்பர் 31 திகதி வரை அமைச்சுக்கு ஒப்படைத்திருக்கவில்லை. | | காரணத்தினால் இந்த நிலைமை உருவாகியுள்ளது. |
| 2015 மார்ச் 31 திகதிய 2/2015 இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கை சுற்றறிக்கையின் படி நிதி குத்தகை அடிப்படையில் பெற்றிருந்த வாகனங்கள் தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் பூர்வாங்க அங்கீகாரம் இன்றி வேறு நிறுவனங்களுக்கு மாற்றுவதற்கு முடியாது. அவ்வாறாயினும், அவ்வாறான அங்கீகாரம் இன்றி குத்தகை அடிப்படையில் உரித்தாக்கியிருந்த வாகனம் ஒன்று கௌரவ இராஜாங்க அமைச்சரினால் அமைச்சரவை மாற்றத்தின் பின்னர் புதிய அமைச்சுக்கு எடுத்துச் செல்லப்பட்டிருந்தது. | -மேற்படி- | ஜனாதிபதி செயலகத்திற்கு சொந்தமாக காணப்பட்ட வாகனம் தற்போது இந்த அமைச்சின் அமைச்சராக வரும் போது கொண்டு வரப்பட்ட வாகனம் ஒன்றாகும். அமைச்சர் அமைச்சிலிந்து விளகிச் சென்ற சந்தர்ப்பத்தில் பயன்படுத்தியிருந்த இந்த வாகனத்தையும் குறிப்பிட்ட அமைச்சுக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது. |
| 2017 திசெம்பர் 21 திகதிய 02/2017 இலக்கங் கொண்ட நிதியமைச்சினால் வெளியிட்டிருந்த சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கையின் 02 பிரிவின் படி அரசின் அனைத்து நிறுவனங்களினாலும் பயன்படுத்தப்பட்ட அனைத்து வாகனங்களும் அந்த நிறுவனத்தின் பெயரிலேயே பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டிய தேவைப்பாடு சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. மேலும், சுற்றறிக்கை அறிவுரையின் படி பதிவு செய்யப்பட்ட உரிமை காணப்படாத பயன்படுத்தப்படும் வாகனங்கள், பதிவு செய்யப்பட்டிருந்த நிறுவனத்தின் இணக்கத்துடன், தமது | -மேற்படி- | அமைச்சரவை மாற்றத்துடன் கௌரவ அமைச்சர்கள் மற்றும் பிரதியமைச்சர்களுக்காக ஒதுக்கப்பட்ட வாகனங்கள் அவர்கள் மாறிச் செல்லும் புதிய அமைச்சுக்கு எடுத்துச் செல்லும் காரணத்தினால் இந்த நிலைமை உருவாகியிருந்தன. |

| | | |
|---|---|---|
| நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்து கொள்வதற்கு அல்லது பதிவு செய்தல் உரிமை காணப்படும் நிறுவனத்திற்கு முறைப் பிரகாரம் உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. எனினும், திறன் அபிவிருத்தி மற்றும் தொழில் பயிற்சி அமைச்சினால் பயன்படுத்தப்படும் மற்றும் அமைச்சிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட அரசுக்கு சொந்தமான 22 வாகனங்களில் பதிவு செய்தல் உரிமை தொடர்பான சிக்கலை நிவர்த்தி செய்வதற்காக 2019 திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| திறைசேரிச் செயலாளரின் 2015 மார்ச் 31 திகதி 2/2015 இலக்கங் கொண்ட தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவுறைகள் மற்றும் நி.பி. 756(4) இன் பிரகாரம் திறன் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி அமைச்சுக்கு சொந்தமான திருத்த வேலை மேற்கொள்ளப்பட வேண்டிய நிலமையில் காணப்பட்ட மற்றும் பயன்படுத்தப்படாமல் அப்புறப்படுத்தப்பட வேண்டிய நிலையில் காணப்பட்ட 08 வாகனங்கள் மாணவர்கள் பயன்படுத்துவதற்காக பல நிறுவனங்களுக்கு சாட்டப்பட்டிருந்ததுடன், அந்த வாகனங்கள் தொடர்பாக பதிவினை இரத்து செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. வாகனங்கள் குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு கிடைத்தமைக்கான எடுத்துமூல சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | -மேற்படி- | வாகனங்களின் பதிவினை இரத்துச் செய்தல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கும் போது அந்த வாகனங்களுக்குரிய பதிவு செய்தல் சான்றிதழ்களின் மூலப் பிரதிகள் காணாமல் போயுள்ளமையால் குறிப்பிட்ட விடயங்களை பூர்த்தி செய்வதற்கு முடியாமல் போனது. பதிவுச் சான்றிதழ்களின் பிரதிகளை பெற்றுக்கொள்ளல் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், பிரதிகள் கிடைத்த பின்னர் குறிப்பிட்ட அலுவல்களை பூர்த்தி செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. |

## 3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 உலக இளைஞர் திறன் தினத்தை ஒட்டி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்லூரிகள் / தொழில்பயிற்சி நிலையங்களில் மாணவர்களின் உதவியுடன் நாடு பூராகவும் மாவட்ட அடிப்படையில் சமூக உதவி நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தது. மேற்கொள்ளப்படும் கருமங்கள் எவை என குறிப்பாக இனங்கண்டிருக்காமல் 25 மாவட்டங்களுக்கான ரூபா 4,915,450 தொகை செலவிடப்பட்டிருந்தது. உலக இளைஞர் திறன் தினத்திற்கு உடன் நிகழ்வாக திறன்களின் மூலம் வெற்றிகரமான வாழ்க்கை என் தொனிப் பொருளின் கீழ் ரூபா 2,077,743 தொகை செலவிடப்பட்டு திறன் தினத்தின் ஞாபகர்த்த விழா ஒன்று நடாத்தப்பட்டிருந்த போதிலும், தற்போது தொழிற்கல்வி பெறும் மாணவர்களின் தொழிற்திறனை மதிப்பீடு செய்திருக்கவில்லை. மேற்கொள்ளப்பட்ட மொத்தச் செலவில் 70 சதவீதத்தில் அண்மித்த தொகை அதாவது ரூபா 1,423,436 தொகை விழா ஒழுங்கு செய்தல், விழா மண்டபக் கட்டணம், சீருடைகள், பகல் உணவு, தேநீர் உபசரிப்புக்காக செலவிடப்பட்டிருந்தது. | முறையான திட்டமொன்றின் படி செலவு முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும். | நாடு பூராகவும் குறித்த மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட சமூக உதவி நிகழ்ச்சித் திட்டம் என செயற்படுத்தப்பட்டது உலக இளைஞர் திறன் தினத்தை ஒட்டி இந்த அமைச்சின் கீழ் செயற்படும் தொழில் பயிற்சி நிறுவனங்களின் தொழில் பயிற்சி பெறும் மாணவர் களின் பங்களிப்புடன் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடொன்றாகும். அந்த நிகழ்ச்சித் திட்டங்களை தெரிவு செய்தல் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் கலந்துரையாடலின் பின்னர் மாவட்ட தலைவர்களினால் மேற்கொள்ளப்பட்டது. ஒரு மாவட்டத்திற்கு ரூபா 200,000 ற்கான உச்சமட்ட தொகை என பிரேரிக்கப்பட்டதுடன் அந்த ரூபா 200,000 தொகையும் அத்தியவசிய பண்டங்கள் கொள்வனவு செய்தவற்கு மாணவர்களின் போக்குவரத்து, மாணவர்களுக்கு உணவு வழங்குதல் ஆகிய விடயங்களுக்கே செலவிடப்பட்டிருந்தது. |

**3.8 முகாமைத்துவ திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய தொழில் தகைமை உடைய இளைஞர் யுவதிகளின் வாழ்வாதார வழி ஒன்றிற்கு உட்படுத்தும் குறிக்கோளுடன் ஆரம்பிக்கப்பட்டிருந்த இந்த வேலைத் திட்டத்தின் கீழ் ரூபா 500,000 கடன் தொகையொன்று 7 சதவீத கடன் வட்டியின் கீழ் பெற்றுக்கொள்வதற்காக தேசிய தொழில் தகைமை உடைய பாடநெறிகள் பயின்றிருக்க வேண்டியிருந்தது. இதன் கீழ் 2016 ஆண்டு முதல் 2018 திசெம்பர் 31 திகதி வரை 790 நபர்களுக்கு ரூபா 352,220,482 ற்கான கடன் தொகை ஒன்று வழங்கப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கையின் படி இந்த கடன் திட்டத்தின் கீழ் கடன் விண்ணப்பதாரிகளை தெரிவு செய்யும் பொறுப்பு அமைச்சிக்கு சாட்டப்பட்டிருந்த போதிலும், அமைச்சின் தலையீடின்றி அங்கீகரிக்கப்பட்ட வங்கி களினால் கடன்பெறுவோரை தெரிவு செய்து கடன் வழங்கப்பட்டிருந்தது. அதன் படி 618 கடன்பெறுவோரிடையே எழுமாறாக தெரிவு செய்யப்பட்ட 50 கடன்பட்டோர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது தேசிய தொழில் தகைமைகளை பூர்த்தி செய்திருக்காத மூவருக்கு கடன் உடன்படிக்கைக்கு புறம்பாக ரூபா 1,500,000 ற்கான கடன் வழங்கப்பட்டிருந்தது. அதேபோல் கடன் உடன்படிக்கையின் படி சுயதொழில் முயற்சி ஒன்று ஆரம்பிப்பதற்கு தேவையான அடிப்படை உபகரணங்கள் மற்றும் மூலப்பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக கடன் வழங்க முடியும் எனினும், மேற்கொள்ளப்பட்ட கணிப்பீட்டின் | உடன்படிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். | 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது தொழில்பயிற்சி மாணவர்களின் கடன் திட்டத்திற்காக உட்படுதல் அதிகரித்திருப்பதனால் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்டிருந்த ஏற்பாடுகள் போதியளவாக காணப்படாமையால் மேலதிக ஏற்பாடுகளுக்காக விண்ணப்பிக்கப்பட்டது. இலங்கை மத்திய வங்கியினால் கடன் பெற்றோரின் தகவல்கள் 2017 ஆண்டு முதல் வழங்கப்பட்டிருந்தது. 2016 ஆண்டிற்கான தகவல்கள் இலங்கை மத்திய வங்கிக்கு கடிதம் அனுப்பப்பட்டு தற்போது பெற்றுக்கொள்ளப் பட்டுள்ளது. கடன் வழங்கும் போது கடன் பெறுவோருக்கு காணப்படும் திருப்பிச் செலுத்தும் தகைமை ஏனைய விடயங்கள் தொடர்பாக ஆலமாக ஆய்வு செய்து தீர்மானம் எடுத்தல் தொடர்பாக சிறந்த அனுபவம் வங்கித்துறை உத்தியோகத்தர்களுக்கு காணப்படுவதனால் பங்குகொள்ளல் நிதி நிறுவனத்தினால் கடன் விண்ணப்பதாரிகள் தெரிவு செய்யப்படுவர். SEPI கடன் திட்டத்தின் ஆரம்ப கட்டத்தின் கீழ் RPL (முன்னறிவுப் பரிசோதனை) மூலம் NVQ பெற்றிருந்த ஆட்களுக்கும் கடன் வழங்கப்பட்டிருந்தது. அந்த ஆட்கள் அதிகமாக வியாபார நிலைய உரிமையாளர்களாகவோ |

| | | | |
|---|---|---|---|
| | படி 38 சதவீதத்தை நெருங்கிய தொகையினர் தொழில் நிலை விரிவாக்கும் நோக்கத்திற் காகவே கடன் தொகையை பெற்றிருந்தனர். அதன்படி கடன் திட்டத்தின் மூலம் எதிர்பார்த்த குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | | அல்லது ஏதேனும் நிறுவனத்தில் சேவையாற்றும் ஆட்களாக இருந்தனர். அவர்கள் வியாபாரத்தை விரிவாக்குவதற்காக கடன் பெற்றிருந்தனர் என |
| (ஆ) | நாடு பூராகவும் அமைந்துள்ள பிரதேச செயலகங்களுக்காக அமைச்சின் திறன் அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர்கள் 264 பேர் இணைக்கப்பட்டிருந்த போதிலும், கடன் பெறுவோர் தொடர்பாக தொடர் கணிப்பீட்டுக்காக 2006 தேசிய பெறுகை வழிகாட்டல் கோவைக்கு புறம்பாக தனியார் நிறுவனம் ஒன்றுக்கு ரூபா 1,730,625 தொகை செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், தெரிவு செய்யப்பட்ட கடன் பெறுவோர் சிலருடன் கணக்காய்வினால் மேற்கொள்ளப்பட்ட தொலைபேசி கலந்துரையாடலின் படி கடன் பெறுவோரின் முன்னேற்றம் தொடர்பாக போதியளவு தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தேசிய பெறுகை வழிகாட்டல் கோவையின் படி செயற்பட வேண்டும். | வெற்றிகரமான மற்றும் வெளிப்படைத்தன்மையான கணிப்பீடொன்று மேற்கொள்வதற்காக வெளி நிறுவனம் ஒன்றின் மூலம் கணிப்பீடு மேற்கொள்வதற்கு அமைச்சின் செயலாளரினால் அறிவுரை மற்றும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அந்த கணிப்பீட்டின் மூலம் இனங்கண்டிருந்த திருப்திகரமற்ற நிலைமை தொடர்பாக முன்னேற்ற மீளாய்வு கூட்டத்தில் கலந்துரையாடி அதற்கான முன்னேற்றம் தொடர்பாக நிரந்தரமான தொடர் நடவடிக்கை ஒன்றிற்கு ஆளாக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மேற்கூறிய கணிப்பீட்டின் படி பல்வேறு திருப்திகரமற்ற நிலைமைகள் இனங்காணப்பட்டிருந்தன. அங்கு கடன் வழங்கும் போது நீண்ட காலம் எடுத்தல், வங்கி SEPI கடன் தொடர்பாக குறைந்த கவனம் செலுத்துதல், கடன் SEPI கடன் திட்டம் தொடர்பாக வங்கி அறிந்திருக்காமை. SEPI கடன் திட்டத்தின் வட்டி வீதத்தை விட கூடிய வட்டி வீதத்தில் கடன் வழங்குதல், கடன் பெறுவோர் குறிப்பிட்ட கடன் தொகையில் இருந்து ஏதேனும் தொழில் ஒன்று ஆரம்பித்தல் அல்லது இருக்கும் தொழிலை தொடர்ந்தும் நடத்தாமை போன்ற காரணங்கள் அவதானிக்கப்பட்டன.<br>எவ்வாறாயினும், இந்த கடன் திட்டம் தொடர்பாக அமைச்சின் தலையீடு குறைந்த மட்டத்தில் காணப்பட்டமை இதற்கு காரணமாக இருந்தன என அவதானிக்கப்பட்டது. | முறைப்பிரகாரம் உடன்படிக்கைகளை செயற்படுத்துவதற்கு அமைச்சின் நேரடி தலையீடு ஒன்று பேணப்பட வேண்டும். | SEPI PHASE II இன் கீழ் NVQ பாடநெறியை கற்றிருந்த தொழில் முயற்சிகளை ஆரம்பிக்கும் பயிற்சி பெற்றோர்களுக்காக மாத்திரம் கடன் வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது.<br>முன்னேற்ற, மீளாய்வு கூட்டங்களில் இது தொடர்பாக நலன் பெறும் நிறுவனங்களின் உத்தியோத்தர்கள் மற்றும் வங்கி உத்தியோகத்தர்களுக்கு அறிவுறை வழங்கப்பட்டுள்ளது. |

## 3.9 அரசாங்க உத்தியோத்தரின் பிணை வைப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் பிணை வைக்க வேண்டிய உத்தியோகத்தர்களினால் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் செயற்பட வேண்டும். | பதில் அனுப்பியிருக்கவில்லை. |

## 4 நல்லாளுகை

### 4.1 பொது மக்களுக்கான சேவைகள் மேற்கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|
| அமைச்சினால் இலக்கம் 05/2008 மற்றும் 05/2018(1) பொது நிருவாக முகாமைத்துவ அமைச்சுச் சுற்றறிக்கையின் படி பிரஜைகள் / சேவை பெறுவோர் நியதிச் சட்டம் ஒன்று தயாரித்து செயற்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதன்படி செயற்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | பிரஜைகள் / சேவை பெறுனர் நியதிச் சட்டம் தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அடுத்த வருடம் காட்சிப்படுத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

## 5 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோக த்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அமைச்சின தேசிய கொள்கைகள் பொருளாதார விவகார பிரிவின் மீளாய்வாண்டு இறுதியளவில் அங்கீகரிக்கப்பட்ட ஆளனி எண்ணிக்கை 261 ஆக காணப்பட்டதுடன், உள்ளவாறான ஆளணி எண்ணிக்கை 195 ஆக இருந்தமையால் 66 வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டன. | தேவையின் படி வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல்லது பதவியணியை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | வெற்றிடங்கள் தொடர்பாக பொது நிருவாக அமைச்சை அறிவுறுத்துதல் மற்றும் வெற்றிடமாகியுள்ள முகாமைத்துவ சேவை மற்றம் பட்டதாரி பதவிகளின் கடமைகள பட்டதாரி பயிலுனர்களினால் நிறைவேற்றப்படுகின்றன என |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2018 ஜனவரி 24 திகதிய 02/2018 இலக்கங் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். | 2020 ஆண்டிற்கான மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என, |
| (இ) | மீளாய்வாண்டின் போது உள்ளவாறான ஆளணி எண்ணிக்கை 195 பேரில் 130 பேரிற்கு ஆண்டின் போது பயிற்சி பெறும் சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்காததுடன், அது உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கையின் 67 சதவீதமாகும். | பதவியணி பயிற்சி அலுவல்கள் திட்டமிடல் செயற்படுத்துதல் முறைப்படுத்தப்பட வேண்டும். | ஆட்சேர்ப்பு அலுவல்கள் அநேகமாக காணப்பட்டமையால் பயிற்சி வழங்கும் திட்டங்களுக்காக காலம் ஒன்று காணப்படாமையால் பயிற்சி வழங்கும் சந்தர்ப்பங்கள் நழுவியிருந்தன. |